கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணிப் (மீள்) பரீட்சை, ஆண்டு 1 - 2019

## சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : 07

**நான்கு** (04) வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. சட்டமென்பது சமூகக் கட்டுப்பாட்டுக்கான இன்றியமையாத ஆக்கக்கூறொன்றாகும். ஆகவே, சமூகத்திற்குச் சிறந்த சேவையினை சட்டம் எவ்வாறு வழங்குகின்றது என்பதனை நிரூபிக்க வேறுபட்ட கருத்தேற்புக்கள் தோற்றம்பெற்றுள்ளன.

   சட்டம் மற்றும் சமூகத்திற்கிடையிலான இடைத்தொடர்பானது எங்ஙனம் கருத்தேற்பு ரீதியாக்கப்பட்டுள்ளது என்பதனை ஏதேனும் இரண்டு சட்ட சிந்தனைப் (schools of legal thought) பிரிவுகளின் பின்னணியில் விளக்குக.

   (25 புள்ளிகள்)

2. எதிரிடைவாத (Adversarial) மற்றும் விசாரிப்பு (Inquisitorial) ஆகிய இரு முறைமைகளின் ஆக்கக்கூறுகள் பெரும்பாலும் ஒன்றிணைந்திருப்பினும், அத்தகைய முறைமைகளுக்கிடையே கணிசமானளவு வேறுபாடுகள் காணப்படுவதனைச் சட்ட அறிஞர்கள் அவதானிக்கின்றனர்.

   இவ்விரு முறைமைகளின் செயற்பாட்டில் நீதிபதிகளின் வகிபங்கு தொடர்பில் குறிப்பாகத் தொடர்புறுத்தி ஒப்பிட்டு வேறுபடுத்துக.

   (25 புள்ளிகள்)

3. நியதிச் சட்டத்தின் எழுத்துரு சொற்களின் மீது மாத்திரம் நீதிபதிகள் கவனஞ் செலுத்த வேண்டுமேயன்றி, வேறுபட்ட பொருள்கோடல்களை வழங்குவதற்காக அச்சொற்களுக்கப்பால் செல்லக்கூடாது.

   நீர் உடன்படுகின்றீரா? பொருள்கோடல் விதிகள் மற்றும் பொருத்தமான அதிகார ஆதாரங்களுடன் தொடர்புறுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (25 புள்ளிகள்)

4. 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து COVID-19 வைரஸினால் காந்தார் அரசானது பாதிக்கப்பட்டுள்ளது. வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த உடனடி மற்றும் அவசர நடவடிக்கையாக 2020 ஆம் ஆண்டின் COVID-19 தடுப்புச் சட்டத்தினை காந்தார் அரசாங்கம் இயற்றியது. பொதுவிடங்களில் பொதுமக்கள் முககவசம் அணிவதனை இச்சட்டத்தின் பிரிவு 5 ஆனது கட்டாயமாக்குகின்றது. மேலும், COVID-19 பரவுவதைத் தடுப்பதான கடமையினை ஒவ்வொரு நபரும் கொண்டிருப்பதுடன் இச்சட்டம் விதித்துரைத்துள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிக்காதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இச்சட்டத்தின் பிரிவு 7 ஏற்பாடு செய்கிறது.

காந்தாரின் தலைநகரத்திலுள்ள புகையிரத நிலையத்தில் முககவசம் அணியாமல் மக்கள் குழுவொன்று அலைந்து திரிவதை காவல்துறையினர் தமது எழுமாற்றமான பரிசோதனையொன்றின் போது கண்டனர். அம்மக்கள் குழுவினர் காந்தாரின் சிறு சமூகமொன்றான ‘லூலூ’ இனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். தாழ்ந்த சாதியினர் தங்கள் முகத்தை மறைப்பது தங்களது இனத்தின் நீண்டகாலப் பாரம்பரியமொன்றாகும் என அச்சமூகத் தலைவர் கோரினார். கிருமியை நீக்க உதவுவதாக அவர்கள் நம்புவதனால் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள் மஞ்சள் துணியொன்றினை தங்களது கழுத்தினைச் சுற்றி தொங்கவிட்டுள்ளனர். அவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் எச்சட்டத்தினையும் அவர்கள் மீறவில்லை என்பதாகவும் மேலும் அவர்கள் கோரினார்கள். லூலூ இனத்தின் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த உறுப்பினர்கள் முககவசங்களை அணிந்திருந்ததனை காவல்துறையினரும் அவதானித்தனர்.

இவ்வழக்காறு நடைமுறைகளின் வழிதாநதன்மை தொடர்பில் உமது ஆலோசனை நாடப்படுகின்றது. காந்தாரின் சட்டமுறைமையானது இலங்கையினைப் போன்றதென கருதிக்கொண்டு உமது ஆலோசனையை வரைக.

(25 புள்ளிகள்)

5. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மாநாடொன்றில் “இலங்கையின் நீதிமுறை முற்றீடபுக் கோட்பாட்டின் ஏற்புடைமை: ஒரு நுணுக்கமான நோக்கு” என்ற தலைப்பில் கட்டுரையொன்றை சமர்ப்பிக்க நீர் அழைக்கப்பட்டுள்ளீர் என்று கருதிக்கொள்க.

சட்டத்தின் பகுதியொன்றைத் தேர்ந்தெடுத்து, நீதிமுறை முற்றீடபின் பிரதான உள்ளடக்கங்களை எடுத்துரைத்து கட்டுரையொன்றை வரைக.

(25 புள்ளிகள்)

6. பிணக்குகளின் தன்மையைப் பொறுத்து பிணக்குக்கான இணக்கத்தீர்வு முறையானது விருப்பமான தெரிவினை திறத்தவர்கள் நாடுவது தொடர்பில் இலங்கையானது பிணக்குக்கான தீர்வுப் பொறிமுறைகளில் வளமான பாரம்பரியத்தை கொண்டுள்ளது. ஒவ்வொரு முறைமைக்கும் அதற்கே உரித்தான குறிக்கோள்கள் மற்றும் நுட்பங்களைக் கொண்டிருப்பதுடன், அதற்கேயுரிய அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் என்பனவற்றையும் கொண்டுள்ளன. இலங்கையில் பிணக்குக்கு மாற்றுத் தீர்வு முறையொன்றாக நடுத்தீர்ப்பு (Arbitration) என்ற கருத்தேற்பின் பின்னணியில மேலுள்ள கூற்றினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

7. சட்டத்தொழில் பணிமுறையின் உயர்தொழில்சார் நெறிகளுடன் தொடர்புறுத்தி பின்வரும் சூழ்நிலைகளை ஆராய்க.

(அ). நீரோ என்ற வழக்கறிஞா நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் கடமையிலிருக்கும் காவல்துறை அதிகாரியொருவருடன் சேவைபெறுநாகளை பெற்றுக் கொள்வதற்கும் தனது பெயா அட்டைகளை சேவைபெறுநாகளுக்கு விநியோகிப்பதற்கும் அக்காவல்துறை அதிகாரிக்கு வழக்கொவ்வொன்றிட்கும் ரூபா 500 வழங்குவதான இரகசிய ஒப்பந்தமொன்றுள்ளது;

(ஆ). புருனோ என்பவன் வழக்கறிஞனொருவன் என்பதுடன் அதே அலுவலகத்தில் நூனோ என்பவன் அவனது உதவியாளனொருவனாகவும் பணிபுரிகின்றான். நாட்டின் பல பகுதிகளில் பலபொருள் அங்காடிகளை வைத்திருக்கும் ராணு அவர்களுடைய சேவைபெறுநராவான். ராணு தனது வழக்கை ஆதாரப்படுத்துவதற்காக தனது வருமான நிலைமையினை தனது வழக்கறிஞருக்கு வழங்கும் படி வேண்டப்பட்டான். வழக்குக் காலப்பகுதியிலும் அதன்பின் பின்னரும் தனது வியாபார வருமானம் வழக்கறிஞா மற்றும் அவரது உதவியாளன் ஆகிய இருவரும் தனது போட்டியாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதனை அவன் அறிந்தான்;

(இ). லால் மற்றும் சிறில் ஆகியோா எதிரெதிர் கட்சிக்காரர்களைப் பிரதிநிதிப்படுத்தும் இரண்டு வழக்கறிஞர்களாவர் என்பதுடன், விசாரணையின் போது ஒருவருக்கொருவர் அவமானப்படுத்திக் கொண்டனா. லால தகாத வார்த்தைகளை பிரயோகித்து சிறிலையும் அவனது சேவைபெறுநரையும் கட்சிக்காரகள் மற்றும் நீதிபதி ஆகியோரின் முன்னிலையில் சத்தமிட்டான்;

(ஈ). வழக்கறிஞரொருவனான கரு என்பவன் உறுதியொன்றினைப் பதிவு செய்வதற்காக தனது சேவைபெறுநரிடமிருந்து பணத்தினைபெறுகிறான். குறிப்பிட்ட காலப்பகுதியில் கரு தனது பணியினை முடிக்கத் தவறியதன் காரணத்தினால் வங்கிக் கடனை வாடிக்கையாளனுக்கு பெறமுடியவில்லை. கரு தனது அலுவலகத்தினை புதுப்பிக்க அப்பணத்தினைச் செலவிடுகின்றான்.

(25 புள்ளிகள்)